[1981 பிப்ரவரி 27

[முற்பகல் 11–20]

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, இன்னும் ஒரே ஒரு முக்கியமான கேள்வி. தயவு செய்து அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்ல வேண்டியது அனைத்தையும் சொல்லியாகிவிட்டது. 4 கேள்விகளைக் கேட்க அனுமதிக்கப்பட்டிருக்கிறீர்கள். இனிமேல் அனுமதிக்க முடியாது.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு சிறைக்கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவினை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) பகுதிநேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு 1981 —(தொடர்ச்சி.)

*திரு. ஆர். தியாகராசன் : மரியாதைக்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பகுதிநேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு உங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கிராம அதிகாரிகள் பல்லாண்டுக்காலமாக அதிக அதிகாரம் உள்ள பதவிகளாக அதை ஏற்று வந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு படிப்படியாக இன்று அடிமைப்பட்டிருக்கிற சம்பளம் வாங்கக் கூடிய கிராம ஊழியர்களாக ஆக்கப்பட்டு, வேலைகள் கொடுக்கப்பட்டு அதற்கு ஊதியமும் வழங்கப்படு